விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 006 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 10 புதன்கிழமை (25.12.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே





# பாதாளக் குழுக்களை ஒடுக்க நடவடிக்கை

## அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ



*(கொழும்பு)*

மீண்டும் தலைதூக்கும் பாதாள உலகக் குழுக்களை ஒடுக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

*(12ஆம் பக்கம் பார்க்க)*

## ஜனாதிபதி நிதியத்தில் முறைகேடுகள்

### விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

ஜனாதிபதி நிதியத்தில் கடந்த காலங்களில் ஏதேனும் முறைகேடுகள் நடந்துள்ளதா என்பது குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக் களத்தினர் விசா

11

# புதிய அரசமைப்பு நிறைவேற்றப்படும்

## அரசு எந்த விதத்திலும் பின்வாங்காது பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன



*(கொழும்பு)* இலங்கையில் புதிய அரசமைப்பு இயற்றப்படும் என்ற உறுதிமொழி நிச்சயம் நிறைவேற்றப்படும். இந்த விடயத்தில் அரசு எந்தவிதத்திலும் பின்வாங்காது எனப் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

*(12ஆம் பக்கம் பார்க்க)*

## சாவகச்சேரி பொலிஸ் பிரிவில் பகல் வேளை வீடு புகுந்து துணிகரத் திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அரசடி - ஆசிரியர் வீதிப் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பகல்வேளையில் துணிகரத் திருட்

11

## யாழில் பெண்ணிடம் தகாத முறையில் நடந்த பொலிஸார்

### பொதுமக்களால் நையப்புடைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் பெண்ணிடம் தகாத முறையில் நடந்த பொலிஸ் உத்தியோகத்தர் நையப்புடைக்கப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் அப்பகுதியில் தையலகம் நடத்தும்

11

## அரச ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிப்பு

### பிரதியமைச்சர் அனில் ஜயந்த



(கொழும்பு)

அடுத்த வருடம் நிச்சயமாக அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும்என தொழில்

11

## வழங்கியிருக்கும் வாக்குறுதிகளை அநுர அரசு சாத்தியமாக்குவது சவாலானது

### இலங்கைக்கான முன்னாள் இந்திய உயர்ஸ்தானிகர்

(கொழும்பு)

பொருளாதார மீட்சி மற்றும் கட்டமைப்பு ரீதியிலான மாற்றம் என்பன சார்ந்து வழங்கியிருக்கும் வாக்குறுதிகளை சாத்தியமாக்குவது இலங்கை அரசாங்கத்துக்கு சவால் மிக்கது என இலங்கைக்கான முன்னாள் இந்திய உயர்ஸ்தானிகர் யஷ்வர்தன் குமார் சின்ஹா தெரிவித்துள்ளார்.

11

## யாழ்.பேருந்து நிலையத்தில் சாரதி, நேரக்காப்பாளர் மீது மர்மநபர்கள் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்பேருந்து நிலையத்திற்குள் புகுந்த இனந்தெரியாத இருவர் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான காரைநகர் சாலையின் சாரதி மற்றும் நேரக்காப்பாளர் மீது தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

11

## மன்னாரில் 17 இந்திய மீனவர்கள் கைது

(மன்னார்)

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி

11

## மின்சார சபையிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்ட 62 பேர் மீண்டும் சேவையில்

(கொழும்பு)

கடந்த அரசாங்க காலப்பகுதியில் மின்சார சபையை தனியார் மயமாக்குவதற்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டமைக்காக பணி இடைநீக்கம் செய்யப்பட்டிருந்த இலங்கை மின்

12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லை தாண்டிய குற்றச்சாட்டில்

# நடப்பாண்டில் 554 இந்திய மீனவர்கள் கைது

*(கொழும்பு)*

இந்த வருடத்தில் நாட்டின் கடல் எல்லையை மீறிய குற்றச்சாட்டில் 554 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் கடற்பரப்பிற்குள் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போது குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

அத்துடன், அவர்கள் வந்த 72 மீன்பிடிப் படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (ம-7)

# சண்டிலிப்பாய்ச் சந்தியில் மோ.சைக்கிள் விபத்து

## தம்பதியினர் படுகாயம்

மானிப்பாய்பொலிஸ்பிரிவிற்குட்பட்ட சண்டிலிப்பாய் சந்தியில்இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் கணவனும் மனைவியும்படுகாயமடைந்துள்ள நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அராலி பகுதியைச் சேர்ந்த கணவன் மனைவி இருவரும் சண்டிலிப்பாய் சந்திப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது அவ்வீதியால் வந்த இன்னொரு மோட்டார் சைக்கிள் அவர்கள் மீது மோதியது.

இதன்போது இருவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மற்றைய மோட்டார் சைக்கிளின் சாரதி மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்!
SOLA CHEMICAL COMPANY (PVT) LTD

| | | | |
|---|---|---|---|
| எயார் ப்ரெஷ்னர் | 4L | ~~3000~~ | 1000 |
| கண்ணாடி கிளீனர் | 4L | ~~1500~~ | 850 |
| கல்சியம் நீக்கி | 4L | ~~1400~~ | 850 |
| சலவைத் திரவம் | 4L | ~~2000~~ | 950 |
| மாபிள் கிளீனர் | 4L | ~~1400~~ | 850 |
| டிஷ் வோஷ் | 4L | ~~1300~~ | 750 |
| டொய்லட் கிளீனர் | 4L | ~~1400~~ | 850 |
| ஹானட் வோஷ் | 4L | ~~2000~~ | 1000 |

100g டிஷ் வோஷ் சோப் 2 கட்டி ரூ 100

விசேட விலைக் கழிவு

(2831)

NO.576/2C, Siyambalape road, Heiyanthuduwa, makola, Reg No.PV00240433

288, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 021 222 0866, 0777 495 494

## யாழ். பல்கலையில்

# மார்கழி இசைவிழா

யாழ்.இந்தியத் துணைத் தூதரகம், நல்லூர் சைவத் தமிழ் பண்பாட்டுக் கலைக் கூடல் மற்றும் யாழ்.வணிகர் கழகம் இணைந்து ஏற்பாடு செய்துள்ள 2024 மார்கழி இசைவிழா எதிர்வரும்-27, 28, 29 ஆம் திகதிகளில் மாலை-05 மணி முதல் இரவு-09 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் வெகுசிறப்பாக இடம்பெறவுள்ளது.

தவில், நாதஸ்வரம், வயலின், கர்நாடக சங்கீதம், நடனம், நாட்டிய நாடகம், இலக்கிய நாடகம் போன்ற கலாசாரப் பண்பாட்டு நிகழ்வுகளை உள்ளடக்கிய மாபெரும் இசைவிழாவாக நடாத்தப்படவுள்ள மூன்று நாள் நிகழ்வுகளிலும் இந்திய ஈழத்துக் கலைஞர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ம-7)

# மார்கழிப் பெருவிழா இன்று

## யானை மீது திருமுறைகள் நகர்வலம்

யாழ்ப்பாணம் கொக்குவில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் ஏற்பாட்டில் இன்று புதன்கிழமை இடம்பெறும் மார்கழிப் பெருவிழாவில் விசேட அம்சமாக மேன்மைகொள் சைவ நீதிதனை உலகறிவிக்கும் பொருட்டு சிவனருட்செல்வர்களினால் தில்லைக் கூத்தன் தென்னாடுடைய சிவன் மீது பாடியருளப்பட்ட திருமுறைகள் யானையேற்றம் கண்டு யாழ்.மாநகரை வலம் வரவுள்ளன.

இப்புண்ணிய நிகழ்வானது இன்று புதன்கிழமை காலை 8.30 மணியளவில் வண்ணை வைத்தீஸ்வரன் திருக்கோவிலில் விசேட வழிபாடுகளை அடுத்து ஆரம்பமாகவுள்ளது.

ஆலய முன்றலில் ஆரம்பமாகும் திருமுறை நகர்வலப் பவனியானது யாழ்.மாநகரை வலம் வந்து மார்கழிப் பெருவிழாவின் அரங்க நிகழ்வுகள் இடம்பெறும் யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தை வந்தடையவுள்ளது.

தொடர்ந்து காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணிவரை தில்லைக்கூத்தன் திருவம்பலம், சேக்கிழார் அரங்கம் என இரு அரங்கங்களாக மார்கழிப் பெருவிழா சிறப்புற இடம்பெறவுள்ளது. (ம-7)

## கரவெட்டி மேற்கில்

# 18 வயது இளைஞன் சடலமாக மீட்பு

*(கரவெட்டி)*


கரவெட்டி மேற்கில் 18 வயது இளைஞன் சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

நேற்று முன்தினம் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் கரவெட்டி மேற்குப் பகுதி யைச் சேர்ந்த சுரேஷ் சிவகலக்சன் 18 அகவையுடைய இளைஞரே வீட்டில் தூக்கிட்டு உயிரிழந்துள்ளார் .

சடலம் உடற்கூற்றுச் சோதனைக்காகப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் . (ம-7)

# மரண அறிவித்தல்



தோற்றம்
26.02.1946

மறைவு
22.12.2024

# ஆறுமுகம் பசுபதி

## (சுதா அரைக்கும் ஆலை உரிமையாளர்)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், 10 கட்டை விசுவமடுவை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பசுபதி அவர்கள் கடந்த (**22.12.2024**) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்றவர்களான இராமநாதன் - சீதேவிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும் தங்கமணியின் (பெற்றி) ஆருயிர் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சீதேவிப்பிள்ளை (தங்கம்) மற்றும் தில்லைநாயகி, சின்னம்மா, நித்தியபாக்கியம் (பிரான்ஸ்), தர்மரட்ணம் (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தயாளன் (லண்டன்), காலஞ்சென்ற முகுந்தன் மற்றும் மோகனன் (அவுஸ்ரேலியா), சுகந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கணபதிப்பிள்ளை, குணேஸ்வரி, நடராசா, கேதாரநாதன், கமலாம்பிகை ஆகியோரின் மைத்துனரும் சுதாஜினி (லண்டன்), குமுதினி (அவுஸ்ரேலியா), அகிலன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிஷா, ஆருஷா, பாரிசாலன், சஸ்வின், கிஷான், யஸ்வி, யஷானி, சயிரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் **26.12.2024** நாளை வியாழக்கிழமை முற்பகல் **10.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விசுவமடு **12**ம் கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

10ம் கட்டை,
விசுவமடு

**077 813 0374**

(2832)

*தகவல்:*
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபானசாலைகளை மூடுமாறு கோரி கிளிநொச்சியில் கண்டனப்பேரணி

(கண்டாவளை)

**கிளிநொச்சியில் அதிகரித்த மதுபான சாலைகளை மூடுமாறு கோரி கண்டனப்பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது**





கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகளவான மதுபானசாலைகள் திறக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து குறித்த போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி பசுமைப் பூங்கா முன்றலில் இருந்து ஆரம்பமாகி கிளிநொச்சி மாவட்ட செயலகம் வரை குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பேரணியைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கான கோரிக்கைகள் அடங்கிய மகஜரை மதத் தலைவர்கள் இணைந்து மாவட்ட அரச அதிபர் சு.முரளிதரனிடம் கையளித்துள்ளனர்.

குறித்த போராட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் சிவில் சமூக அமைப்புகள் மதத் தலைவர்கள் மற்றும் வர்த்தக சங்கத்தினர் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் பெண்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (நி-8-315)

## முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு; நடப்பாண்டில் இதுவரை 1448 மில்.செலவு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு மற்றும் இதர சலுகைகள் குறித்து எதிர்வரும் வாரமள வில் உறுதியான் தீர்மானம் எடுக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு சேவையில் இருந்து இராணுவத்தினர் மீள ழைக்கப்பட்டு பொலிஸார் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் வினவிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது, "அரசியல் பழிவாங்கலுக்காக முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு குறைக்கப்பட்டது என்று குறிப்பிடுவது அடிப்படையற்றது.

முன்னாள் ஜனாதிபதிக ளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னரே பாதுகாப்பு பணியில் இருந்த இராணுவத்தினர் சேவையில் இருந்து மீளழைக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு பலவீனப்படுத்தப்பட்டுள்ளது என்று அரசி யல் குற்றச்சாட்டுக்களை முன் வைக்கும் தரப்பினர் முறையான காரணிகளை குறிப்பிட வேண்டும். ஒட்டுமொத்த மக் களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு.

பாராளுமன்ற உறுப்பினர் களுக்கு வழங்கப்பட்டுள்ள பாது காப்பு மற்றும் இதர சலுகைகள் குறித்து எதிர்வரும் வாரமள வில் உறுதியான தீர்மானம் எடுக்கப்படும்.

முன்னாள் ஜனாதிபதிக ளின் பாதுகாப்பு தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானம் ஆறு மாத காலத்துக்கு ஒருமுறை மீள்பரிசீலனை செய்யப்படும். முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்கு போதுமான அளவில் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்காக இந்த ஆண்டு இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 1448 மில்லியன் ரூபா செலவழிக் கப்பட்டுள்ளது" என அவர் மேலும் தெரிவித்தார். (நி-8)

## சட்டவிரோத மணல் அகழ்வு தடுக்க நடவடிக்கை எடுப்போம்

### இளங்குமரன் எம்.பி உறுதி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தென்மராட்சி பகுதிகளில் இடம்பெறும் சட்ட விரோத மணல் அகழ்வுகளை தடுக்க நடவடிக்கைகளை எடுப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் கணநாதன் இளங்குமரன் தெரிவித்துள்ளார்.


யாழ்ப்பாணம் - தென்ம ராட்சி - கரம்பகம் பிரதேசத்திலுள்ள வீதிகள் மற்றும் விவசாய நிலங்களில் தொடர்ச்சியாக சட்டவிரோத மண் அகழ்வு இடம் பெற்று வருகிறது.

அந்நிலையில் இதனைக் கண்டித்து பிரதேச மக்கள் கடந்த ஞாயிற்றுக் கிழமை போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

மக்கள் போராட்டத்தை தொடர்ந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் கண நாதன் இளங்குமரன், சாவகச் சேரி பிரதேச செயலர் உஷா சுபலிங்கம், கரம்பகம் கிராம அலுவலர் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று மண் அகழ்வு இடம் பெற்றுள்ள இடங்களை பார் வையிட்டதுடன் மணல் அகழ்வுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக=ஹ தெரிவித்தனர் (நி-8-33)


## மரண அறிவித்தல்

மலர்வு 08 . 09 . 1945



உதிர்வு 19 . 12 . 2024

### அமரர்.சோமசுந்தரம் சிவம்

### (சிவமண்ணை)

யாழ்ப்பாணம் இணுவில் தெற்கை பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கு, கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சிவம் (சிவமண்ணை) அவர்கள் 19.12.2024 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மனோன்மணி தேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் ராசம்மா, சோதிமலர், நீதிமலர், தனலட்சுமி ஆகியோரின் அன்புச்சகோதரனும், காலஞ்சென்றவர்களான செல்வராசாத்தி, கந்தையா, அருமைத்துரை, பரம்சோதி மற்றும் முருகையா ஆகியோரின் அன்பு மைத்துனரும் கோபி கிருஸ்ணா, பாபுஜி, புரந்தரி, மிருளாயினி, உமையாழினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெனனி, சிவரூபன் (ரூபன்), சிவசக்தியகுமார் (குமார்), சிறிகோபிகிருஸ்ணா (கோபி) ஆகியோரின் மாமனாரும் திவ்வியன், அனுஜன், அக்சயன், ஆருஜன், மானஷா, பவிஸ்ணா, கவின், பவித்ரா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.12.2024 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் உள்ள North Toronto Crematorium Inc என்ற முகவரியில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
மருமகன் மு.ஜங்கரன்

இணுவில் (669)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# மெல்போர்ன் டெஸ்டில் ஹாட்ரிக் வெற்றியை நோக்கி இந்தியா

## மீண்டும் சாதிப்பாரா கோலி



அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி ஐந்து போட்டிகள் கொண்ட "பார்டர் - கவாஸ்கர்) டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் மூன்று போட்டி முடிவில் தொடர் 1-1 என சமநிலையில் உள்ளது. நான்காவது டெஸ்ட் நாளை மெல்போர்னில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் இந்தியா வின் அனுபவ வீரரான கோலி 36 ரன் மழை பொழியலாம். இவருக்கு மெல்போர்ன் மைதானம் ராசியானது. இங்கு 2022 இல் நடந்த "ரி-20" உலக கோப்பை லீக் போட்டியில் பாகிஸ்தான் பந்து வீச்சை சிதறடித்தார். 53 பந்தில் 82 ரன் விளாசி இந்திய அணிக்கு "திரில்" வெற்றி தேடித்தந்தார். டெஸ்ட் போட்டியை பொறுத்தவரை மெல்போர்னில் 2011 இல் 7 ஆவது இடத்தில் களமிறங்கிய கோலி 11 ரன், 2 "கச்" பிடித்தார். 2014இல் முதல் இன்னிங்சில் சதம் (169) அடித்த இவர் நான்காவது விக்கெட்டுக்கு ரஹானேவுடன் (147) சேர்ந்து 262 ரன் சேர்த்தார். இரண்டாவது இன்னிங்சில் 54 ரன் எடுத்து போட்டியை "டிரா" செய்ய உதவினார். 2018இல் கப்டனாக களமிறங்கிய கோலி, முதல் இன்னிங்சில் 82 ரன், இரண்டாவது இன்னிங்சில் மிட்சல் மார்ஷ், பின்ச் கொடுத்த "கச்சை" பிடித்து, வெற்றிக்கு வித்திட்டார்.

மெல்போர்னில் அதிக ரன் எடுத்துள்ள இந்திய வீரர்களில் கோலி 3ஆவது இடத்தில் உள்ளார். 3 டெஸ்டில் ஒரு சதம், இரு அரைசதம் உட்பட 316 ரன் (சராசரி 52.66) குவித்துள்ளார். முதல் இரு இடங்களில் சச்சின் (5 டெஸ்ட், 449 ரன்), ரஹானே (3 டெஸ்ட், 369 ரன்) உள்ளனர். சச்சினை முந்தி முதலிடம் பிடிக்க, கோலிக்கு 134 ரன் தேவை.

தற்போதைய தொடரில், பெர்த்தில் சதம் (5, 100*) விளாசி வெற்றிக்கு உதவினார் கோலி. ஆனால், அடிலெய்டு (7, 11), பிரிஸ்பேன் (3) என இரு டெஸ்டிலும் சேர்த்து 21 ரன் தான் எடுத்தார். 3 போட்டியில் 126 ரன் எடுத்துள்ளார். நான்காவது டெஸ்ட் மெல்போர்னில் நடக்க இருப்பது இவருக்கு சாதகம். இங்கு கோலி மிகவும் பிரபலம். "டிக்கெட் கவுன்டரில்" கூட இவரது போட்டோவை காணலாம். இங்குள்ள அருங்காட்சியகத்தில் 2018-19 இல் பார்டர்-கவாஸ்கர் கோப்பையை கோலி முத்தமிடும் படங்களை பார்க்கலாம். தனக்குப் பிடித்த மெல்போர்னில் இம்முறை கோலி சதம் விளாசி இந்திய வெற்றிக்கு கைகொடுக்க வேண் டுமென ரசிகர்கள் எதிர்பார்க் கின்றனர்.

மெல்போர்னில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 14 டெஸ்டில் இந்தியா 4இல் வென்றது. 8 தோல்வி, 2இல் "டிரா" செய்தது. அவுஸ்திரேலிய மண்ணில் முதல் வெற்றியை (1977-78) இங்கு பெற்றது. மெல்போர்னில் கடந்த இரு டெஸ்டில் (2018, 2020) இந்தியா தான் வென்றது. இம் முறை அசத்தினால் "ஹாட்ரிக்" வெற்றியை பதிவு செய்யலாம். (6-8)

# இந்திய தொடரிலும் பென் ஸ்டோக்ஸ் விலகல்



பென் ஸ்டோக்ஸ் தலைமையிலான இங்கிலாந்து டெஸ்ட் அணி சமீபத்தில் நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வந்தது. இத்தொடரின் முடிவில் இங்கிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் நியூசிலாந்தை அதன் சொந்த மண்ணிலேயே வீழ்த்தி டெஸ்ட் தொடரையும் கைப்பற்றி அசத்தியது.

இதனையடுத்து இங்கிலாந்து அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரிலும், 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரிலும் விளையாடவுள்ளது.

இந்நிலையில் இத்தொடர்களுக்கான ஜோஸ் பட்லர் தலைமையிலான இங்கிலாந்து அணியை அந் நாட்டு கிரிக்கெட் வாரியம் அறிவித்தது.

இதில் பெரிதும் எதிர் பார்க்கப்பட்ட நட்சத்திர ஆல் ரவுண்டர் பென் ஸ்டோக்ஸ்க்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. முன்னதாக சம்பியன்ஸ் கோப்பைத் தொடரில் விளையாடுவேன் என பென் ஸ்டோக்ஸ் உறுதியளித்திருந்த நிலையில் இத்தொடருக்கான இங்கிலாந்து அணியில் அவரது பெயர் இடம்பெறாதது ரசிகர்களுக்கு ஏமாற்றத்தை வழங்கியது.

இந்நிலையில் பென் ஸ்டோக்ஸை இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம் தேர்வு செய்யாததற்கான காரணம் வெளியாகியுள்ளது.

அதன்படி நியூசிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் பந்துவீசும் போது காயமடைந்த பென் ஸ்டோக்ஸ் களத்தில் இருந்து பாதியிலேயே வெளியேறினார். இதையடுத்து அவருக்கு ஸ்கான் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அந்தச் சோதனையின் முடிவில் ஸ்டோக்ஸின் காயம் தீவிரமடைந்துள்ளதாகவும் அவர் காயத்தில் இருந்து குணமடையை குறைந்தது 3 மாதங்கள் ஆகும் என்றும் மருத்துவர்கள் கூறியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இதன் காரணமாகவே அவர் சம்பியன்ஸ் கோப்பைத் தொடருக்கான இங்கிலாந்து அணியிலும் இடம்பிடிக்கவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன. (6-8)

# இராசிபலன்

25.12. 2024
மார்கழி 10, புதன்கிழமை
தசமி முன்னிரவு 10.52மணிவரை
சித்திரை பிற்பகல் 4.12 மணிவரை

சுபநேரம் -4.56- 6.26 மணிவரை
இராகுகாலம்- 12.26- 1.56 மணி வரை
நத்தார் பண்டிகை,
பாலன் பிறப்பு பெருவிழா

சந்திரஷ்டமம்
சதயம், பூரட்டாதி

வளவன்

**மேஷம்**: நண்பர்கள் நம்பிக் கைக்குப் பாத்திரமாக விளங்குவர், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, முயற்சிகள் கைகூடும்.

**ரிஷபம்**: குடும்பத்தில் சுகம் கூடும், சந்தோஷம் அதிகரிக்கும், உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்**: பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், வெளியூர் தொடர் புகள் அனுகூலம் தரும், நன்மைகள் நாடி வரும் நாள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**கடகம்**: இல்லத்தில் இனிய சம்பவங்கள் இடம் பெறலாம், தேவைகள் பூர்த்தியாகும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**சிம்மம்**: ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள்.

**கன்னி**: குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், புதிய முயற்சிகள் கைகூடும், வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள்.

**துலாம்**: தொழிலில் புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, திட்டமிடப் படாத காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்**: பயணங்களில் பிரபல மானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுபவிரயங்களில் தாராளம் காட்டுவீர்கள். காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**தனுசு**: தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்**: ஆடம்பரப் பொருட்கள் மீது அதிக ஆர்வம் காட்டுவீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கும்பம்**: பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், போசன சுகமுண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.

**மீனம்**: எதையும் பல முறை யோசித்துச் செய்வது நல்லது, குடும்பத்தினரிடையே முரண்பாடுகள் தோன்றி மறையும், தொழில் ரீதியான பயணங்களின் போது கூடுதல் கவனம் தேவை.

**நீ அமைதியாக வாழ விரும்பினால் சந்தேகப்படாமல் இரு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் வெள்ளிவிழா

## 20.12.2024

## வலம்புரி விருது பெற்றோர்



திருமதி.செ.சத்தியப்பிரியா



அ.சர்மிளா



திரு.கு.விஜயகுமார்



திரு.மு.கௌரிகாந்தன்



திரு.ச.அருணன்

# பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு-அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கும் தீர்மானத் திற்கு அமைச்சரவை அங்கீ காரம் வழங்கியுள்ளது.

இதன்படி ஒரு ஹெக்டேய ருக்கு ஒரு இலட்சம் ரூபாவை நிவாரணமாக வழங் குவதற்கு தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ அறிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக் கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், நெல், சோளம், உரு ளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம் மற்றும் சோயா பீன்ஸ் ஆகிய ஆறு வகையான பயிர்களை பயிரிட்ட விவ சாயிகளுக்கு இந்த இழப்பீடு வழங் கப் படவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டி னார்.

இதேவேளை கடந்த டிசம் பர் 2 ஆம் திகதி வரையான மோசமான கால நிலையினால் ஏற்பட்ட பயிர்ச்சேதங்கள் தொடர்பில் விவசாயத்துறை அமைச்ச ரினால் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப் பட்டுள்ளதாகவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தொடர்ந்தும் குறிப்பிட்டுள் ளார். (நி-8)

# போதைப்பொருளுடன் ரஷ்ய நாட்டவர் கைது

(கொழும்பு)

"குஷ்" என்ற போதைப் பொருளை கடத்த முற்பட்ட நபர் ஒருவர் நேற்று முன்தினம் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத் தில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரி வின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து கைப்பற்றப் பட்ட போதைப்பொருளின் பெறு மதி 10 மில்லி யன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேக நபர், 34 வயதான ரஷ்ய நாட்டவர் என்றும் அவர் நாட்டில் தகவல் தொழில் நுட்ப நிபுணராக பணிபுரிந்த வர் என்றும் ஆரம்பக் கட்ட விசார ணையில் கண்டறியப்பட் டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)

# கிளி.மாவட்ட மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள் வழங்கி வைப்பு



(தருமபுரம்)

சீன அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட மீன்பிடி வலைகள் கிளிநொச்சி மாவட்ட மீனவர்களுக்கு வழங்கும் பணி நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

வடபகுதி மீனவர்களுக்கென கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு கொண்டு வரப்பட்ட மீன்பிடி வலைகள் கிளிநொச்சி மாவட்ட மீனவர்களுக்கு வழங்கும் பணி முன்னெடுக்கப்பட்டது.

மாவட்ட கடற்றொழில் நீரியல் வளங் கல் திணைக்கள அலுவலகத்தில் வைத்து மீன்பிடி வலைகள் வழங்கப்பட் டது.

கிளிநொச்சி மாவட்டத்தைச்சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 870 மீனவர்களுக்கு தலா 6 வலைகள் மூலம் 5,220 வலைகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் பாலசுப்பிரமணியம் ரமேஸ் கண்ணா தெரிவித்தார். (6-8-316)

# போதைப்பொருளை ஒழிப்பதற்கு பொலிஸாருக்கு முழு சுதந்திரம்

(கொழும்பு)

போதைப்பொருளை ஒழிப் பதற்கு தற்போதைய அரசாங் கம் பொலிஸா ருக்கு முழுச் சுதந்திரம் வழங்கியுள் ளதாக பொது பாதுகாப்பு மற்றும் பாரா ளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

புறக்கோட்டை மிதக்கும் வணிக வளாகம் குறித்து ஊட கங்களுக்குக் கருத்துத் தெரி வித்த போதே இதனைத் தெரிவித்த அவர், புறக்கோட்டை மிதக் கும் வணிக வளாகம் போதைப்பொருள் கிடங்காக மாறியுள்ளதாகவும் கவலை தெரிவித்துள்ளார். (நி-8)

# 389 பேருக்கு பொதுமன்னிப்பு

(கொழும்பு)

நத்தார் பண்டிகையை முன்னிட்டு சிறப்பு அரச பொதுமன்னிப்பின் கீழ் 389 சிறைக்கைதிகள் விடுவிக்கப்படவுள்ள தாகச் சிறைச்சாலை திணைக்களம் தெரி வித்துள்ளது.

அவர்களில் நால்வர் பெண் கைதிகள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் வெள்ளிவிழா

## 20.12.2024

## வலம்புரி விருது பெற்றோர்



திரு.உ.பாலமுருகன்



திரு.கு.முருகதாஸ்



திரு.அ.ரம்சன்ராஜ்



திரு.சீ.ஞானேஸ்வரன்



திரு.சி.சுரேந்திரா

# உணவகங்களில் திடீர் பரிசோதனை

## உணவகங்களுக்கு எதிராக நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பண்டிகைக் காலத்தையொட்டி யாழ் மாவட்டத்தில் உணவு கையா ளும் நிலையங்களின் சுகாதார நிலையை மேம்படுத்தும் நோக்கு டன் வடமாகாண சுகாதாரப் பணிப் பாளரின் வழிகாட்டலின் கீழ் நேற்று திடீர் பரிசோதனை மேற்கொள் ளப்பட்டது.

யாழ்ப்பாணம் நல்லூர், உடுவில் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இந்த செயற்பாடு முன் னெடுக்கப்பட்டது. இக்களப் பரிசோத னையில் சுகாதாரத் திணைக்களத் தைச் சேர்ந்த 9 குழுக்கள் ஈடுபட்டிருந்தன. இதன்போது 76 உணவு கையாளும் நிலையங்கள் மேற்பார்வை செய்யப்பட் டன.

இவற்றில் 28 உணவு கையாளும் நிலையங்களில் குறைபாடுகள் காணப்பட்டிருந்தன. அதில் 12 உணவு கையாளும் நிலையங் களுக்கு குறை பாடுகளை சீர்செய்யும் படி எழுத்துமூல அறிவுறுத்தல் வழங்கப்பட்டதுடன் 15 உணவு கையாளும் நிலையங்களில் தர மற்ற உணவுகள் பறிமுதல் செய்யப் பட்டன. மேலும் 2 உணவு கையாளும் நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

அதன் தொடர்ச்சியாக யாழ் மாவட் டத்திலுள்ள ஏனைய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் இப்பரிசோதனை நடவ டிக்கை தொடர்ந்து முன்னெடுக் கப்படும் என யாழ். பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் வைத்திய கலா நிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள் ளார். (6-8)

# முன்னாள் எம்.பியும் அவரது செயலாளரும்

## பிணையில் விடுவிப்பு

(குருமன்காடு)

வன்னி மாவட்ட முன்னாள் பாரா ளுமன்ற உறுப்பினரும் முன்னாள் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவ ருமான கு.திலீபன் மற்றும் அவரது பிரத்தியேக செயலாளர் ஆகியோரை வவுனியா மாவட்ட நிதிமோசடி குற்றப் பிரிவு பொலிஸார் கைது செய்து கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா நீதி மன்றில் முற்படுத்திய நிலையில் அவர் கள் இருவரும் பிணையில் விடுவிக்கப் பட்டனர்.

குறித்த இருவரையும் வவுனியா நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தியி ருந்தனர். இதன்போது அவர்கள் 3 இலட் சம் ரூபாய் பணத்தினை முறைப்பாட்டா ளருக்கு செலுத்திய நிலையில் குறித்த இருவரையும் சரீர பிணையில் நீதிமன் றம் விடுவித்துள்ளது. (6-8-250)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 24, ஆசீர்வாதம் ஒழுங்கை, 22 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம், இல-22, ஆசீர்வாதம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சடாட்சரம் றெஜி புவனேந்திரனும், சடாட்சரம் புனிதரூபனும், தங்களது பிதாவழிப் பேரன் காலஞ்சென்ற கந்தையா காசிப்பிள்ளை ஆகியவரால் 1925 ஆம் ஆண்டிலிருந்து ஆட்சிபண்ணப்பட்டு அவர் காலமாகிவிட தங்கள் பிதா காலஞ்சென்ற காசிப்பிள்ளை சடாட்சரம் அவர்களால் தொடர்ந்து எவ்வித தடையுமின்றியும் இடையூறுயின்றியும் ஆட்சிபண்ணப்பட்டு தொடர்ந்து தங்களால் நீண்டகாலமாக ஆட்சிபண்ணப்பட்டு வரும் ஆதனம் என குறிப்பிட்டு 12.07.2012 ஆம் திகதியிட்டு பிரசித்த நொந்தாரிசு சி.இளங்கீரன் முகதாவில் 502 ஆம் இலக்க சீதன உறுதி மூலம், அதேயிடத்தைச் சேர்ந்த தமது சகோதரியான செபரட்ணம் ஜெனதாஸ் பெண் தேவமனோகரிக்கு வழங்கியுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, குருநகர் இறை யாழ்ப்பாணம் பிரதேச செயலகப் பகுதியில் யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்ட ஜே/74 கிராம சேவகர் பிரிவில் உள்ள "வீரபத்திரபுலம்" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் மெல்வின் ஞானப்பிரகாசம் 12.07.2012 ஆம் திகதியிட்டு வரைந்த 1053 ஆம் இலக்கப் படத்தில் துண்டு 1 எனச்சுட்டப்பட்ட விஸ்தீரணம் நிலப்பரப்பு ஒன்று குளி மூன்று தசம் ஆறும் (நில.பர 01 குளி 3.6) கல்வீடும், கிணறும், மலகூடமும் இதற்கு எல்லைகள்-

கிழக்கு-கனகையா செல்வராசாவுக்கும் பெண் சின்னக்குஞ்சுவுக்கும் உரிய ஆதனம்.

வடக்கு-திருமதி.மேரி சறோஜா ஜஸ்ரினின் ஆதனம்,

மேற்கு- ஆசீர்வாதம் லேன்

தெற்கு - ஒழுங்கை இதடங்கலும்,

தற்போது செபரட்ணம் ஜெனதாஸ் பெண் தேவமனோகரி இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு, இல-203/10, ஆசீர்வாதம் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமது அற்றோணித் தத்துவக்காரர் ஜெயராஜகுலேந்திரன் வோல்வின் மூலம் விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது செபரட்ணம் ஜெனதாஸ் பெண் தேவமனோகரி என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**யாழ் மாநகர சபை.** (சி-1887)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட பதிவாளர்களுக்கு இடையிலான கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

இலங்கை பதிவாளர் திணைக்களத்தின் பதிவாளர் நாயகத்திற்கும் யாழ்.மாவட்ட பதிவாளர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் நிகழ்வு அண்மையில் யாழில் உள்ள திவ்ய மஹால் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது இலங்கை பதிவாளர் திணைக்களத்தின் நாயகம் டபிள்யு.ஆர். எ.என்.எஸ். விஜயசிங்கவிற்கு யாழ். மாவட்ட விவாக பிறப்பு, இறப்பு பதிவாளர் சங்கத் தலைவி திருமதி வ.சோமசூரிய சிங்காவால் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண பிரதிப் பதிவாளர் நாயகம் கணபதிப்பிள்ளை நடராஜா, பிரதிப் பதிவாளர் நாயகம் செல்வி ஆனந்தி ஜெயரட்ணம், கிழக்கு மாகாண பிரதிப் பதிவாளர் நாயகம் பரஞ்சோதி பிரபாகர் மற்றும் பதிவாளர் சங்கத்தின் செயலாளர் டாக்டர் ஜெயசோதி ஜெயலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (6-8)

# யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத் தலைவராக மனோன்மணி



(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவராக செல்வி சி.மனோண்மணி தெரிவு செய்யப்பட்டுள்ளார். யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தின் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த வெள்ளிக் கிழமை யா/அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் புதிய தலைவராக செல்வி. சி.மனோண்மணி, செயலாளராக திருமதி சி.சகிலன், பொருளாளராக திருமதி.எஸ்.லஜித்தா, உபதலைவர்களாக செல்வி.சி.சுரேந்தினி, திருமதி எஸ்.சத்தியபாமா, செல்வி எஸ்.தனுஜா, உப செயலாளர் திருமதி எஸ்.அஜந்தா, உப பொருளாளரராக எஸ்.மைதிலி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (6-8-90)

லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974

அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபம் (ASR WEDDING HALL)

முகூர்த்த நாட்களுக்கான பதிவுகள்

எமது வாடிக்கையாளர்களுக்கு நத்தார் புதுவருட பண்டிகை நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்கள் பிள்ளைகளின் திருமணம், பூப்புனித நீராட்டு விழாக்கள், கிறிஸ்தவப் பதிவுத் திருமணங்கள், பிறந்தநாள் கொண்டாட்டம், பாடசாலை நிகழ்வுகள், அரச மற்றும் நிறுவனங்களில் நடைபெறவிருக்கும் நிகழ்வுகள் செய்ய விரும்புவோர்கள் பதிவுகளை மேற்கொள்ள நாடவேண்டிய மண்டபம் அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபம்.

திங்கள் தொடக்கம் வெள்ளி வரை காலை 9 மணி முதல் 4.30 மணிவரையும் சனி காலை 9 மணி தொடக்கம் 12.30 மணி வரைக்கும் மண்டபத்தை பார்வையிடலாம்.
ஞாயிறு விடுமுறை.
(2714)

இல.542, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் : 021 222 1355, 077 744 6064

# வலம்புரியின் வெள்ளிவிழா 20.12.2024

## எம்மகத்தே வாழும்வலம் புரியே

தற்பெருமை தன்னகத்தே அற்றதின சரியே - இங்கு
பற்பலரும் புரிந்துகொள்ளும் நற்றமிழில் வரியே
அற்பமல்ல அனைத்துமனல் கக்கும்தீப் பொறியே - எங்கும்
எப்பொழுதும் எம்மகத்தே வாழும்வலம் புரியே

தலைப்புகளின் கருத்தினிலே செய்திகளைப் புரியும் - உயர்
நிலையதனைக் கொண்டிருக்கும் பின்னரொவ்வோர் வரியும்
சுளைசுளையாய் செய்திகளை சுடச்சுடவே அறியும்
விளைநிலமாய் ஆனதொன்றே எங்கள்வலம் புரியும்

பொய்வதந்தி புரளிகளோ உன்னிடத்தில் இல்லை - உடன்
செய்திகளை திரட்டுவதில் உனக்குநிகர் இல்லை
மெய்யாக கொண்டுவிட்டாய் எம்மனதைக் கொள்ளை - தினமெம்
கைகளிலே தவழுகின்ற அறிவுச்செல்லப் பிள்ளை

வெளியுலகை காணாத வெகுளிகளும் உண்டு - அந்த
பழிச்சொல்லால் பரதவித்த பாமரரும் உண்டு
தெளிவுபெற்றார் அவருந்தன் தினச்செய்தி கண்டு - இன்று
குழிபறித்தார் பழிச்சொல்லுக் குன்னுதவி கொண்டு

விடியும் பொழுதினிலே உன்முகத்தைப் பாராது - ஒரு
நொடியும் பொறுமையுடன் ஓரிடத்தில் ஆறார்
அடித்துப்போட்ட அரவம்போல் அங்குலமும் நகரார் - உனை
படித்துமுடிக்கும் வரை வீட்டுப்படி வந்து சேரார்

உலகத்தின் நிலையின்று இவையென்றினம் காட்டி
விலையில்லா உலகறிவை அனைவருக்கும் ஊட்டி
வலம்புரியே நீ செய்யும் சேவைதனைப் போற்றி
உளம்மகிழ்ந்து கவியினிலே புகழ்ந்தேன் பாராட்டி.

- டே.த.எட்வின் -
உடுவில்

## தமிழர் தேசத்தின் வழிகாட்டி

மாமணித் திருநாட்டின் சென்னி
யாழ்ப்பாண முற்றத்தில்
நாள்தோறும் உயிர் மூச்சாய்
அழகாய் விரியும் வலம்புரியே
அன்பான அகவைநாள் வாழ்த்துக்கள் !

தமிழர் தேசத்தின் வழிகாட்டி
தன்னிகரில்லா தலைவன் நீ
தமிழ் இனத்தின் கண்ணாடி
தளர்வில்லா விம்பம் நீ
வருவாய் சூரியனாய்
தருவாய் பிரகாசம் நீ
வாழ்க வலம்புரியே
வளமுடன் ஒளிர்க எந்நாளும் !!

தடைகளை தகர்த்து
நிமிர்ந்த எம் வலம்புரியே
சத்திய வேள்வியின்
சரித்திர நாயகன் நீ,
அறம் காத்து
உரம் தந்த அறங்காவலனும் நீ !!!

பத்திரிகை தர்மத்தை பக்குவமாய்
பாதுகாக்கும் பண்பாட்டு சுடரே
நடுவுநிலைமை நன்னெறி
கொள்கையை வரிந்தவனே
அதனை இம்மியும் பிசகாமல்
இன்றுவரை காப்பவனே
வேண்டும் உன் வரவு
காலத்தின் தேவையும் அதுவே !!!!

கோவையூர் - ஜெயன்

## வலம்புரி வாழி பல்லாண்டு!

தெள்ளுத்தமிழ்க் கவிதையொடு கட்டுரைகள்
தெவிட்டாத தொடர்கதைகள் பலவும் தந்து
அள்ளி இன்பம் தருகின்ற வலம்புரியே
அவனிதனில் நீயென்றும் நலம்புரிய
வள்ளுவனார் நெறிநின்று வையம் போற்ற
வலம் வருவாய் நீயென்றும் இளமையோடு
வெள்ளிவிழாக் காண்கின்றாய் வித்தை நல்கி
வீறுகொண்டு வளர்ந்தென்றும் வாழி வாழி !

கடுகதியாகச் சுடச்சுடச் செய்திகளைக்
கவர்ச்சியாய் தந்து காலையில் மலரும்
நடுவுலை தவறா நன்னெறி காக்கும்
நாளிதழ் வலம்புரி வாழி பல்லாண்டு !

- நயினை இராகுலன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கூட்ட நெரிசலில் சிக்கி

# 67 பேர் உயிரிழப்பு

## நைஜீரியாவில் மனதை உறைய வைக்கும் சோகம்

(அபுஜா)

**நைஜீரியாவில் நத்தார் பண்டிகையை முன்னிட்டு இலவசமாக வழங்கப்பட்ட உணவுகளைப் பெறுவதற்காக சென்ற 67 பேர் கூட்ட நெரிசலில் சிக்குண்டு உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.**



ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் கடுமையான பஞ்சம் நிலவி வருகின்றது. இதன் காரணமாக அந்நாட்டு மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் அந்நாட்டில் கடந்த வாரம் நத்தார் பண்டிகையை முன்னிட்டு பல்வேறு பகுதிகளில் மக்களுக்கு இலவசமாக உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த உணவுப் பொருட்களை பெற ஏராளமான மக்கள் அப் பகுதிகளுக்கு படையெடுத்த தால் அங்கு கடுமையான கூட்ட நெரிசல் ஏற்பட்டதாகவும் அதில் ஏராளமானோர் சிக்கிக் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


அந்தவகையில் ஓயோ மாநிலத்தில் கடந்த புதன்கிழமை ஏற்பட்ட சன நெரிசலில் சிக்கி 35 குழந்தைகள் வரை உயிரிழந்துள்ளனர் எனவும் தென்கிழக்கு அனம்ப்ரா மாநிலத்தில் சனிக்கிழமை இடம்பெற்ற கூட்ட நெரிசலில் சிக்கி 22 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், அந்நாட்டின் தலைநகர் அபுஜாவில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 10 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவங்கள் உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில் இது தொடர்பான தீவிர விசாரணைகளை முன்னெடுக்குமாறு அந் நாட்டு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக அந்நாட்டு ஜனாதிபதி அனைத்து கொண்டாட்டங்களையும் இரத்து செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த சம்பவத்திற்கு நாட்டில் நிலவும் அதிகப்படியான வறுமை, விலை அதிகரிப்பு மற்றும் அரசாங்கத்தின் தவறான நடவடிக்கைகளே காரணம் என எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## கொதிக்கும் கிலாவியா எரிமலை எந்நேரமும் வெடிக்கும் அபாயம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் ஹவாய் தீவில் அமைந்துள்ள கிலாவியா எரிமலை கொதிக்கத் தொடங்கியுள்ளது. எந்நேரமும் வெடிக்கும் அபாயம் உள்ளது என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவுக்கு சொந்தமான ஹவாய் தீவு பசுபிக் பெருங்கடலில் அமைந்துள்ளது. அமெரிக்க நிலப்பரப்பில் இருந்து தென்மேற்கே 2000 மைல்களுக்கு அப்பால் அமைந்துள்ள இந்த தீவு எரிமலைகளுக்கு புகழ் பெற்றது. சுற்றுலாப் பயணிகளின் வருகையும் ஆண்டு முழுவதும் இருக்கும். இங்குள்ள 5 பெரிய எரிமலைகளில் கிலாவியா வும் ஒன்றாகும்.

1983 ஆம் ஆண்டு முதல் எரிமலைக்குழம்பு தொடர்ந்து வெளியேறி வருகிறது. இந்த எரிமலை 4 ஆயிரம் அடி உயரம் கொண்டது. கடந்த 2018 ஆம் ஆண்டு மே மாதம் வெடித்து சிதறியது. எரிமலைக் குழம்பில் 700 வீடுகள், சுற்றுலா மையங்கள், சாலைகள் சேதமடைந்தன. கடந்த 2021 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் மீண்டும் வெடித்து சிதறியது. அப்போதும் பெரும் சேதம் ஏற்பட்டது.

தற்போது மீண்டும் எரிகுழம்பு கொதிக்க தொடங்கியுள்ளது. எந்நேரமும் தீப்பிழம்புகளை வெளியேற்றும் அபாயம் உள்ளது. வீடுகள் உள்ளிட்டவை சேதம் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர். கிலாவியா எரிமலை ஆண்டு முழுவதும் கொதித்துக் கொண்டே இருக்கும் எரிமலையாகும். கடந்த 200 ஆண்டுகளாக தொடர்ந்து வெடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி கிளிண்டன் வைத்தியசாலையில்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில்கிளிண்டன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வோஷிங்டன், டி.சி.யிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

காய்ச்சல் ஏற்பட்டதையடுத்து அவர் சிகிச்சை மற்றும் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக அவரது செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (நி-8)

## துருக்கியில் பயங்கர வெடிவிபத்து 12 பேர் பரிதாப உயிரிழப்பு

(அங்காரா)

துருக்கியில் வெடிமருந்து தொழிற்சாலையில் ஏற்பட்ட பயங்கர வெடிவிபத்தில், 12 பேர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

துருக்கியில் பாலிகேசிர் மாகாணத்தில், வெடிமருந்து தொழிற்சாலை ஒன்று இயங்கி வருகிறது.

நேற்று தொழிலாளர்கள் வழக்கம் போல் பணியில் ஈடுபட்டு இருந்தனர். திடீரென பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதில் கட்டடம் இடிந்து தரைமட்டமாகின. அருகில் உள்ள கட்டடங்களும் சேதம் அடைந்துள்ளன. சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு படையினர் நீண்ட நேரம் போராடி தீயை அணைத்தனர்.

தீ விபத்து நடந்த இடம் புகை மண்டலமாக காட்சி அளித்தது. இந்த விபத்தில் 12 பேர் தீயில் கருகி உயிரிழந்தனர். மேலும், 4 பேர் பலத்த காயமுற்றனர்.

இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். விபத்து குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது மனதில் எவ்வளவு தெளிவிருக்கிறதோ அவ்வளவு ஞானத்தை என்னால் கிரஹித்துக் கொள்ள இயலும். ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இயேசு பாலகனின் பிறப்பு உணர்த்தும் மெய்ப்பொருள்

இயேசு பாலகனின் பிறப்பு இன்று. உலக கிறிஸ்தவ மக்கள் இயேசு பாலகனின் பிறப்பைக் கொண்டாடுகின்ற இத்தருணத்தில் இயேசு பாலகனின் பிறப்பு எதற்கானதென்பதன் மெய்ப்பொருளை நாம் அறிந்தாக வேண்டும்.

அதற்கு முன்னதாக, இந்த உலகம் முழுவதையும் இயக்குகின்ற பரம்பொருள் இந்த வையகம் முழுமையிலும் ஒரே மொழி, ஒரே சமயம் என்ற ஏகநிலையை ஏற்படுத்தியிருக்க முடியும்.

அவ்வாறு ஏற்படுத்துவது ஒன்றும் பரம்பொருளுக்குக் கடினமன்று.

ஆம், கடல் நீரை வானுலகுக்கு அனுப்பி அதனை மீண்டும் வானமிழ்தம் எனும் மழையாக நம் மண்ணுக்குத் தருகின்ற இறைவனின் கருணை எத்துணை உயர்வானது.

சிலவேளையேனும் மழை கடல் நீர்போல் மாறுமாக இருந்தால், இந்த உலக ஜீவராசிகளின் நிலைமை எப்படியாக இருந்திருக்கும்.

ஆக, உலகம் முழுவதும் ஒரே சமயம் என்ற ஏகநிலையை ஏற்படுத்தும்போது கடவுள் நம்பிக்கை வலுப்பெறாமல் மக்கள் சமூகம் மாக்கள் சமூகமாக மாறுகின்ற அவல நிலை ஏற்படும்.

எனவே வெவ்வேறு சமயங்கள் ~ வெவ்வேறு கடவுள் கோட்பாடுகள் ஊடாக இறை நம்பிக்கையும் தன்னுயிர் போல் மன்னுயிரை நேசிக்கின்ற மனப்பக்குவத்தையும் மக்களிடம் வலுப்பெறுவதற்கு இறைவன் வித்திடுகிறான்.

இங்குதான் இறைபரம்பொருள்; இயேசு பாலகனின் பிறப்பினூடு மானிடத்தை வழிப்படுத்தும் மீட்பரை நமக்குத் தந்தருளுகிறார்.

ஆம், பிதாமகன் இயேசு மற்றவர்களின் பாவத்தைச் சுமந்தார்.

மற்றவர்களின் பாவத்தைச் சுமந்து சிலுவையில் அறைபட்டு உயிர்த்தெழுந்த பிதாமகனின் பிறப்பு மனுக்குலத்தை தெய்வீகத்தின் பாதையில் அழைத்துச் செல்வதாகும்.

ஆம் கோபம், பகைமை, பொறாமை, அழுக்காறு என அனைத்தையும் மனித மனங்களில் இருந்து உதறித்தள்ளி, தூய இதயம் உடையவர்களாக ஒவ்வொரு மனிதர்களும் ஆக வேண்டும் என்பதே இயேசு பிரானின் பிறப்புக்கான காரணமாகும்.

எனினும் இந்த உலகம் அடிப்படை உண்மையை விளங்கிக் கொள்ளாமல் ~ ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற மெய்ப்பொருளை அறியாமல், தன் தன் சமயமே உயர்ந்தது. தன் தன் கடவுள்களே மெய்மையானவர்கள் எனக் கூறுகின்ற அளவில் மும்மல இருளில் மூழ்கிக் கிடப்பது தான் மிகப்பெரும் அபத்தம்.

ஆக, உலகின் கண் உள்ள அனைத்துச் சமயங்களும் போதிப்பது அன்பை ~ இரக்கத்தை ~ மனிதநேயத்தை.

எனவே அனைத்து மக்களும் அவரவர் சமயங்களில் நிலைத்து நின்று அண்டம் கடந்த பொருளை, அளவில்லதோர் ஆனந்த வெள்ளப் பொருளை தெய்வீகம் எனும் இறையனுபவத்தால் உணர்ந்து கொள்ள வேண்டும்.

### அரசியலமைப்பில் சுகாதார சேவையை

# அடிப்படை உரிமைகளில் ஒன்றாக பிரகடனப்படுத்த அரசு திட்டம்

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பை வகுக்கும்போது, சுகாதார சேவையைப் பெறுவதற்கான உரிமையை மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றாகப் பிரகடனப்படுத்துவதற்குத்திட்டமிட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு, அமைச்சரவை பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்துள்ளார்.

எனவே, சுகாதார சேவைகளைப் பெறுவதற்கான உரிமையை அடிப்படை உரிமையாக்க வேண்டுமாயின் அதற்கு அவசியமான ஒழுங்குகளை ஏற்படுத்த வேண்டும்.

தற்போது, அரசாங்கம் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

அதன் நிறைவில் மக்கள் தங்களுக்குத் தேவையான இடங்களில் தமக்கான சுகாதார சேவைகளைப் பெற முடியும் என்ற உறுதிப்பாட்டினை அரசாங்கத்தினால் வழங்க முடியும்.

அதற்கான ஆரம்ப கட்டப் பணிகளை சுகாதார அமைச்சு தற்போது ஆரம்பித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தனியார் வைத்தியசாலைகளில் வழங்கப்படும் சேவைகளின் தரம் தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதாகவும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

தனியார் வைத்தியசாலை மற்றும் மருத்துவ நிலையங்களை ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரம் சுகாதார அமைச்சுக்கு உள்ளது.

இது தொடர்பில் முன்னதாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களை சில தனியார் வைத்தியசாலைகள் மீறிவருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பொது மக்கள் தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும்போது எதிர்கொண்ட பல சிக்கல் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

தனியார் வைத்தியசாலைகள் மற்றும் சிகிச்சை நிலையங்களில் வழங்கப்படும் சேவைகளின் தரம் மற்றும் அங்கு அறவிடப்படும் கட்டணம் என்பன தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தி வருகிறது.

இதற்காக சில தனியார் வைத்தியசாலை உரிமையாளர்களுடன் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (ம-7)

# கோட்டாபயவின் காலத்தில் இயற்கை விவசாய மோசடி

## விசாரணை நடத்தத் தீர்மானம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ காலத்தில் சீனாவில் இருந்து உயிர் உரம் இறக்குமதி மற்றும் இயற்கை விவசாயத்தை அறிமுகப்படுத்தியதில் இடம்பெற்ற மோசடிகள் குறித்து அரசாங்கம் புதிய விசாரணைகளை நடத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரசாயன விவசாயத்திற்கு கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் விதித்த தடையால், விவசாயத்துறையில் ஏற்பட்ட நெருக்கடியின் மத்தியில் 2021 இல் சீனாவின் Qingdao Seawin Biotech Group Ltd நிறுவனத்திடம் இருந்து இலங்கை கரிம உரத்தை கொள்வனவு செய்தது.

இருப்பினும், கையிருப்பின் மாதிரிகள் தீங்கு விளைவிக்கும் பக்டீரியாக்களால் மாசுபட்டதாகக் கண்டறியப்பட்டதைக் காரணம் காட்டி, அரச நிறுவனங்கள் அதை ஏற்க மறுத்துவிட்டன.

எனினும் சீன நிறுவனம் இந்தக் குற்றச்சாட்டை மறுத்தது. குறித்த கரிம உரத்தை மீண்டும் தமது நாட்டுக்கு எடுத்துச் சென்றதுடன் உரத் தொகுதிக்கான கொடுப்பனவையும் கோரியது.

இதன்போது, குறித்த விவகாரம் சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையில் வணிக ரீதியான சர்ச்சைக்கும் ராஜதந்திர சர்ச்சைக்கும் வழிவகுத்தது.

இந்த சர்ச்சையை தவிர்க்கும் வகையில், அரசாங்கம் 6. 9 மில்லியன் அமெரிக்க டொலர்களை (ரூ.1,382 மில்லியன்) சீன நிறுவனத்துக்குச் செலுத்தியது.

இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்த கணக்காய்வாளர் நாயகம் தனது அறிக்கையில், இந்தக் கொடுக்கல் வாங்கலில் விவசாய அமைச்சு, விவசாய இராஜாங்க அமைச்சு, கொழும்பு கொமர்ஷல் பெர்டிலைசர்ஸ் லிமிடெட் மற்றும் சிலோன் பெர்டிலைசர் லிமிடெட் ஆகிய நிறுவனங்கள், தமது கடமைகளை நிறைவேற்றத் தவறியுள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

இதன் தொடர்ச்சியாக, குறித்த கொடுக்கல் வாங்கல் குறித்து நிச்சயம் விசாரணை நடத்தப்படும் என்று பிரதி விவசாய மற்றும் கால்நடை அமைச்சர் நாமல் கருணாரத்ன ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

2021 இல் தோல்வியடைந்த இயற்கை விவசாயத் திட்டத்திற்கு அப்போதைய அரசாங்கம் 60 பில்லியன் ரூபாய்களை செலவழித்தது என்றும் அவர் கூறியுள்ளார். (ம-7)

# 23 வயது இளம் யுவதி

## மிருசுவிலில் சடலமாக மீட்பு

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் படித்த மகளிர் திட்டப் பகுதியைச் சேர்ந்த 28வயதான இளம் யுவதி ஒருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யுவதியின் தாயார் தேவாலயத்திற்குச் சென்றிருந்த நிலையில்,

யுவதி வீட்டு வளவினுள் காணப்பட்ட ஆட்டுக் கொட்டகைக்குள் தூக்கிட்டு உயிரை மாய்த்திருப்பதாகத் தெரிய வருகிறது.

உயிரிழந்த யுவதியின் சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

# நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு உதவித் திட்டம்

(யாழ்ப்பாணம்)

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் கர்ப்பிணிப் பெண்கள், வயோதிபர்களுக்காக உதவித் திட்டங்கள் 513 வது இராணுவப் படைப்பிரிவால் நேற்று வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த 50 மாணவர்களின் தேவையைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கான 50 துவிச்சக்கர வண்டிகளும், 25 கர்ப்பிணிப் பெண்களுக்கான உலர் உணவுப்பொருட்களும், 25 வயோதிபர்களுக்கான உலர் உணவுப் பொதிகளும் வகைகளும் வழங்கிவைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் யாழ்ப்பாண மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜென்ரல் மானத ஜகம்பத் 513 வது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி 51 படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜென்ரல் நிசாந்த முத்துமால, 513வது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் பிரசாந்த ஏக்கநாயக்க, தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பா.நந்தகுமார் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள், பொது மக்கள், பாடசாலை மாணவர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்த்தமுள்ள கிறிஸ்மஸ்

இயேசு கிறிஸ்துவின் பிறந்த தினத்தை அகில உலகும் வெகு விமர்சையாக கொண்டாடும் இந்த வேளையில் திருச்சபையானது எதிர்வரும் ஆண்டை யூபிலி ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளது. இவ் யூபிலி ஆண்டில் ஆன்மிக புதுப்பித்தல், பிறரன்புப் பணிகள், நற்செய்தியோடு வாழ்தல் என்பவற்றின் காலமாக அமைய வேண்டுமென திருத்தந்தை பிரான்சிஸ் அகில உலக திருஅவையினருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இறையரசை நிறுவ வந்த இயேசுவின் ஆரம்ப வார்த்தைகளாக "ஆண்டவரின் ஆவி என் மேல் உள்ளது, ஏனெனில் அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார், ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கவும் சிறைப்பட்டோர் விடுதலை அடைவர். பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்." (லூக்கா 4: 18,19)

இவ்வார்த்தைகள் மூலம் அனைவருக்கும் அனைத்திலும் சமய, சமூக, அரசியல் விடுதலையை பெற்றுத்தந்து முழு மனித விடுதலையை அறிவிப்பதே இயேசுவின் வெற்றிச் செய்தியாகும். இவ் வெற்றிச் செய்திக்கேற்ப வாழ்வதே ஒவ்வொரு கிறிஸ்தவனின் கடமையாகும்.

கிறிஸ்து பிறப்பின் ஈராயிரம் ஆண்டுகள் கடந்தும் மனித விடுதலைக்காக ஏங்கும் மக்கள் கூட்டம் அதிகரித்தே செல்கிறது. பல்வேறு தேசங்களில் பல்வேறு உரிமைகள், தேவைகளிற்காக போராடும் சமூகத்தினரின் வாழ்வு ஒருபுறம் மண்ணிலும் விண்ணிலும் உலகம் அதிசயிக்கும் வகையில் கண்டுபிடிப்புக்கள், சாதனைகள், ஆரா



ய்ச்சிகள் என்பவற்றால் பெருமிதம் கொள்கிறது தொழில் நுட்ப அறிவியல் உலகம்.

அறிவியலும் ஆன்மிகமும் போராடும் நிலைகளும் தர்க்க ரீதியில் சிந்திக்கும் நிலைகளையும் இன்று காண முடிகின்றது. என்னதான் தொழில் நுட்பம் வளர்ந்தாலும் தமது அடிப்படை உரிமைகளை இழந்து தவிக்கும் மக்களின் நிலைமைகளை உணர முடிகின்றது.

பல நாடுகளில் நிலவும் உள்நாட்டு போர்களாலும் நாடுகளுக்குள் நாடு நடக்கும் கௌரவ போர்களாலும் இல்லிடம் இழந்து உறவுகளை இழந்து மருத்துவ, உணவு வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் தவிக்கும் மக்களின் வலிகளை நாமும் அனுபவித்தவர்கள் என்ற வகையில் கிறிஸ்மஸ் தினத்தை ஆரவாரமாய் கொண்டாட போகின்றோமா?

15 வருடங்கள் கடந்தும் உள்நாட்டு போரின் வடுக்கள் ஆறாமல் எத்தனையோ உள்ளங்கள் நிம்மதி தேடி அலைகின்றன. இயற்கையின் சீற்றங்களால் பல நூறு குடும்பங்கள் வாழ்வாதாரம், இல்லிடம் இழந்து பொருளாதார வீழ்ச்சியுற்று தவிக்கும் வேளையில் கிறிஸ்து பிறப்பு விழாவானது வீண்செலவு செய்து ஆடம்பரமாக பகட்டுக்காக வாழ நினைக்கின்றோமா? அல்லது பாதிக்கப்பட்ட தேவையுள்ள மக்களின் மனங்களில் மன நிம்மதியை, மகிழ்வை ஏற்படுத்தப் போகின்றோமா?

இயேசுவின் வார்த்தைகளாக "மிகச் சிறியோராகிய என் சகோதர சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கேச் செய்தீர்கள்" (மத் 25:40) என்று அமைந்துள்ளது. இதன் மூலம் அடுத்தவருக்கு செய்யும் உதவிகள் எவ்வளவு வல்லமை மிகுந்தவை என்பதைப் புரிந்து கொள்வோம். பிறர் அன்புப் பணிகளில் ஈடுபடுவதன் மூலம் கிறிஸ்மஸ் பண்டிகையை அர்த்தமுள்ளதாகக் கொண்டாடுவோம்.

இணையத்திலும் போதையிலும் மூழ்கிக் கிடக்கும் இளையோர் ஆன்மிகத்தை தேடவும் சமய சமூக நற்செயல்களை புரியவும் கல்வி மற்றும் தொழில்கல்விகளில் அக்கறை கொள்ளவும் ஆரோக்கியமான இளையோராகக் திகழ அவர்களை நல்வழிப்படுத்துவோம். அன்றாட உணவுக்காக ஏங்கும் குடும்பங்களை தேடிச் சென்று அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வோம். மனம் குழப்பியோரை அரவணைத்து ஆறுதல் வார்த்தைகளால் அவர்களை மகிழ்ச்சிப்படுத்துவோம். பெரியோரை மதித்து மரியாதை செய்வோம். சிறுவர்களை மகிழ்ச்சிப்படுத்த சிறிய பரிசுப் பொருட்களை வழங்குவோம் அவர்களின் கற்றலுக்கு உதவி செய்வோம். தொழில் வாய்ப்புக்களை இழந்தோருக்கு வழிகாட்டுதல்களை மேற்கொள்வோம். இவ்வாறான சிறிய நற்செயல்கள் மூலம் கிறிஸ்து தரும் அன்பை பகிர்ந்து கொள்வதன் மூலம் கிறிஸ்மஸ் நாளினை சிறப்பானதாக்குவோம்.

புதிய அரசியல் பாதையை தேர்ந்தெடுத்த நாம் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டு ஊக்கப்படுத்துவோம். ஊழலற்ற நேர்மையான அர்ப்பணிப்புள்ள தலைமைகளிற்கு கைகொடுத்து பொருளாதாரத்தை உயர்த்துவோம். எத்தனையோ பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் தொடர் நிலையாகவே உள்ளது.

அரசியல் கைதிகள் விடுதலை பெறவும் ஆக்கிரமித்திருக்கும் நிலங்கள் விடுவிக்கப்படவும் காணாமல் ஆக் கப்பட்ட உறவினரின் அங்கலாய்ப்புக்கள் தீர்க்கப்படவும் கல்வி, மருத்துவம் போன்ற அடிப்படை வசதிகள் மறுசீரமைக்கப்படவும் தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கப் பெறவும் பொருளாதார வீழ்ச்சி அதிகரிக்கவும் இன்றைய நாளில் இறைவனை நோக்கி பிராரத்திப்போம்.

ஆசீர்வாதம் பெனற்
இளவாலை

## கச்சதீவு தொடர்பான பிரேரணை

# இந்திய மத்திய அரசு முன்வைத்தால் விவாதிக்க இலங்கை தயார்

## அமைச்சரவை பேச்சாளர் அறிவிப்பு



(கொழும்பு)

கச்சதீவு விவகாரம் தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கம் பிரேரணை ஒன்றை முன்வைத்தால் அது தொடர்பில் விவாதிக்க தயார் என அமைச்சரவை பேச்சாளர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையிடம் இருந்து கச்சதீவை மீட்க வேண்டும் என திராவிட முன்னேற்றக் கழகம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான மீனவப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டுமாயின் கச்சதீவு இந்தியாவினால் கையகப்படுத்தப்பட வேண்டும் என அந்தப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கட்சியின் தலைவரும் தமிழக முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தலைமையிலான கட்சி இந்தத் தீர்மானத்தை செயற்குழுவில் ஏகமனதாக நிறைவேற்றியுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவிக்கையில், இந்திய அரசியல் கட்சியொன்று இந்தப் பிரேரணையை நிறைவேற்றியுள்ள போதிலும், இந்திய மத்திய அரசாங்கம் இது தொடர்பில் இலங்கைக்கு எந்தவொரு யோசனையையும் சமர்ப்பிக்கவில்லை.

எனினும், இந்திய மத்திய அரசு அப்படி ஒரு பிரேரணையை முன்வைத்தால், அது குறித்து விவாதிக்கத் தயார்" எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-8)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 400 | 400 | 400 |
| உருளைக்கிழங்கு | 250 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 800 | 700-900 | 800 |
| தக்காளி | 500 | 300 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 120-150 | 200 |
| கோவா | 220 | .250 | 300 |
| கரட் | 250 | 200 | 300 |
| பூசணி | 200 | 180 | 250 |
| புடோல் | 250 | 250 | 300 |
| வாழைக்காய் | 100 | 80-120 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 350 | 200 |
| பாகற்காய் | 1200 | 900 | 1500 |
| வெண்டக்காய் | 200 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 130 | 200 |
| பயற்றங்காய் | 400 | 250-300 | 400 |
| லீக்ஸ் | 300 | 350 | 400 |
| பீற்றூட் | 350 | 300 | 500 |
| கறிமிளகாய் | 800 | 600-650 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 600 | 500-600 | 500 |
| கத்தரிதம்புள்ள | 350 | -- | 350 |
| கீரை - 1 பிடி | 140 | 150-200 | 250 |
| தேசிக்காய் | 600 | 350-500 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 90-155 | 160-220 |
| இராசவள்ளி | -- | 750 | 300 |
| வெங்காயப்பூ | 550 | -- | -- |
| முள்ளங்கி | 200 | 120 | 300 |
| பொன்னாங்காணி | 120 | 100 | 80 |
| வல்லாரை | 80 | 80 | 120 |
| ஈரப்பலா | 100 | 90 | 250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகல் வேளை...

டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது வீட்டிலிருந்த 8 பவுண் நகைகள், 200 கனேடிய டொலர் மற்றும் 35ஆயிரம் ரூபாய் இலங்கைப் பணம் ஆகியன திருடப்பட்டுள்ளன.

திங்கட்கிழமை பகல் வேளையில் அரச உத்தியோகத்தரான வீட்டு உரிமையாளர் கடமைக்குச் சென்றிருந்த நிலையில் அவரின் வயோதிபத் தாயார் மாத்திரம் வீட்டில் இருந்துள்ளார்.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்திய திருடர்கள் வயோதிபத் தாய் குளியலறைக்குச் சென்றதும் திறந்திருந்த வீட்டிற்குள் நுழைந்து அங்கிருந்த அலுமாரி, கைப்பை ஆகியவற்றில் காணப்பட்ட நகை மற்றும் பணங்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## யாழில் பெண்...

பெண்ணொருவரிடம் தனது சீருடையைத் தைக்கக் கொடுத்துள்ளார்.

தைத்த சீருடையை நேற்று செவ்வாய்க்கிழமை எடுக்கச் சென்ற வேளை, தையலகத்தினுள் வைத்து, அப்பெண்ணுடன் தகாத முறையில் நடக்க முற்பட்டுள்ளார்.

அத்துடன் , தையலகத்திற்கு வந்த மேலும் இரு பெண்களுடனும் தவறாக நடந்து கொண்டுள்ளார்.

இது குறித்து தையலகப் பெண், தனது கணவருக்குத் தொலைபேசியில் தகவல் தெரிவித்ததையடுத்து தையலகத்திற்குச் சில இளைஞர்களுடன் விரைந்த கணவன், தகாத முறையில் நடக்க முற்பட்ட பொலிஸ் உத்தியோகஸ்தரை மடக்கிப்பிடித்து பொலிஸ் நிலையத்தில் கையளித்துள்ளனர்.

குறித்த பொலிஸ் உத்தியோகஸ்தர் மதுபோதையில் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் நிலையத்தில் கையளிக்கப்பட்ட நிலையிலும் குறித்த பொலிஸ் உத்தியோகஸ்தர், பாதிக்கப்பட்ட பெண்ணின் கணவருடனும் ஏனைய இளைஞர்களுடனும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி முன்பாக முரண்பட்டுத் தாக்குதல் நடத்தவும் முற்பட்டுள்ளார்.

அதேவேளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாதிக்கப்பட்டவர்களைச் சமரசப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டமையால், சம்பவம் தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜிடம் பாதிக்கப்பட்ட தரப்பினர் தொலைபேசி ஊடாக முறைப்பாடு செய்ததையடுத்து, அவர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்டவர்களின் முறைப்பாட்டை ஏற்று சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பணித்துள்ளார்.

அதனையடுத்து பொறுப்பதிகாரி முறைப்பாட்டை ஏற்றதையடுத்து, சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33)

## 17 இந்திய...

நுழைந்து சட்டவிரோத முறையிலான மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 17 இந்திய மீனவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை தலைமன்னார் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 17 மீனவர்களும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட 17 மீனவர்களும் தலைமன்னார் கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு முதற்கட்ட விசாரணைகளுக்குட்படுத்தப்பட்ட பின்னர் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டனர்.

குறித்த மீனவர்கள் நேற்றிரவு சுமார் 12.30 மணியளவில் தலைமன்னார் கடற்பரப்பில் சட்ட விரோத இழுவை மடிவலைகளைப் பயன்படுத்தி மீன் பிடித்துக் கொண்டிருக்கும்போது அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கடற்படையினர் இரண்டு ரோலர் படகுகள் உட்பட அதில் மீன்பிடியில் ஈடுபட்ட 17 மீனவர்களையும் கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,285)

## அரச ஊழியர்...

அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான பேராசிரியர் அனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

மக்கள் படும் கஷ்டங்கள் எங்களுக்குத் தெரியும். சம்பள உயர்வை நிச்சயம் எதிர்பார்க்கலாம். அந்த விபரங்களை பட்ஜெட்டில் தாக்கல் செய்வேன் என்றார். (ம-7)

## ஜனாதிபதி...

ரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பதில் பொலிஸ்மா அதிபரின் பணிப்புரையின் பேரில் குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## சாரதி...

நேற்று இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

சம்பவம்தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்.பேருந்து நிலையத்திற்குள் இனந்தெரியாத இருவர் ஹெலமெட், கத்தரிக்கோல் மற்றும் சோடாப் போத்தல்களுடன் வந்துள்ளனர். இதன்போது காரைநகர் சாரதிக்கு அவரது தலையில் சோடாப் போத்தலால் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அங்கு நின்ற நேரக்காப்பாளர் ஏன் தாக்குதல் நடத்துகின்றீர்கள் எனக் கேள்வி எழுப்பியதோடு இது தொடர்பாக பொலிஸாருக்குத்தகவல்கூறவே அவர் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதன் போது அவர்கள் இருவரும் பொலிஸார் வருவதைப் பார்த்துவிட்டு பழக்கடைக்குப் பின்னால் உள்ள வேலியால் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம்தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தாக்குதலில் காயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-7,33)

## வழங்கியிருக்கும்...

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அண்மைய இந்திய விஜயம் தொடர்பில் இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கியிருக்கும் நேர்காணலில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் இந்திய விஜயம் குறிப்பிடத்தக்கதொரு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

ஏனெனில் இலங்கையில் ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல்கள் அண்மையிலேயே நடைபெற்று முடிந்திருக்கின்றன.

அதேவேளை ஜனாதிபதியின் உரைகளில் பல்வேறு முக்கிய விடயங்கள் இடம்பிடித்திருந்தன. குறிப்பாக இந்தியாவின் பாதுகாப்புக்கு எதிராக இலங்கையில் எந்தவொரு நடவடிக்கைகளும் இடம்பெறுவதற்கு தாம் அனுமதிக்கப் போவதில்லை என ஜனாதிபதி ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் கூறியிருந்தார். இது மிக முக்கியமான தாகும் என்றார். (ம-7)

மஹஜன சம்பத
திகதி 2024.12.24
சீட்டிழுப்பு இலக்கம் 5695
U 0 6 0 4 5 5
அத சம்பத
U 0 4 5 5
சீட்டிழுப்பு இலக்கம் 270

தன நிதானய
திகதி - 2024.12.24
சீட்டிழுப்பு இலக்கம் - 1725
M 24 33 48 56 M
68759

மெகா பவர்
திகதி 24/12/2024
சீட்டிழுப்பு இலக்கம் 2043
J 19 15 20 21 56
154895

லக்கி 7 VIP
திகதி 2024.12.24
சீட்டிழுப்பு இலக்கம் 521
Z 9 6 7 9 1 5 Z

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3937
சீட்டிழுப்பு திகதி 24.12.2024
F 02 26 28 45
F 007716

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.12.24
சீட்டிழுப்பு இலக்கம் 1004
மீனம் 39 51 55 60 மீனம்
022272 36

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா 24.12.2024 வெற்றி வாரம் 403
U 2 3 6 5 3 7
27072
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.27,827,573.20

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2669
சீட்டிழுப்பு திகதி 2024.12.24 தினம் செவ்வாய்க்கிழமை
05 12 24 31 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,779,993.60

சனிதா
திகதி 24.12.2024 வெற்றி வாரம் 4830
35 38 41 50 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,476,894.80
08952

சசிரி
வெற்றி வாரம் 585
சீட்டிழுப்பு திகதி 24.12.2024 செவ்வாய்க்கிழமை
17 25 42
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4381
சீட்டிழுப்பு திகதி 24.12.2024 தினம் செவ்வாய்க்கிழமை
13 32 57 59 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,477,086.40
134293

கப்ருக
D 03 07 36 56 59
1845
24.12.2024
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.559,257,458.80

அட கோடிபதி
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2495
சீட்டிழுப்பு திகதி : 2024.12.24
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,916,032.00
14 22 66 67 F
943516

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நம்பினால் நம்புங்கள்

அதிசயம் ஆனால் உண்மை உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும்.

**காயத்திரி திருமண சேவை**
கன்னாதிட்டி சிவன் கோயில் முன்பாக
ரூபி விலாஸ்
(2833)

**075 353 1367, 077 844 9861**


## பாதாள...

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், பாதாளக் குழுக்களின் செயற்பாடு தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினர் திட்டமிட்ட வகையில் தலையீடு செய்து வருகின்றனர்.

பாதாள உலகக் குழுக்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தலை எதிர்த்துப் போராடுவதற்கு அரசாங்கம் என்ற ரீதியில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

பாதுகாப்புப் படையினர் படிப்படியாக இதில் தலையிட்டு வருகின்றனர். தொடர்ந்து நடவடிக்கைகளை எடுப்போம் என மேலும் தெரிவித்துள்ளனர். (ம-7)

## புதிய அரசமைப்பு...

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

நாட்டில் தற்போதுள்ள அரசமைப்புக்குப் பதிலாக புதிய அரசமைப்பு கொண்டு வரப்படும் என்ற உறுதிமொழி மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கு மக்கள் ஆணையும் கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே, அந்த உறுதிமொழி நிச்சயம் நிறைவேற்றப்படும்.

புதிய அரசமைப்புத் தொடர்பில் மக்களின் கருத்துக்கள் உள்வாங்கப்படும். நாட்டில் இதுவரை இயற்றப்பட்ட அரசமைப்புகளின்போது மக்களின் கருத்துகள் உள்வாங்கப்படவில்லை. எம்மால் கொண்டு வரப்படும் அரசமைப்பு மக்கள் அனுமதி கிடைத்ததாக இருக்க வேண்டும். அதற்குரிய பணிகளுக்காகவே மூன்று வருடாங்கள் என கால எல்லை குறிப்பிடப்பட்டிருக்கலாம்.

கடந்த கால யோசனைகளும் உள்வாங்கப்பட்டு எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இதனைச் செய்வதற்கு எதிர்பார்க்கின்றோம். சிலவேளை மூன்று வருடாங்களுக்கு முன்னர் கூட அது நடக்கலாம் என்றார். (ம-7)

## பணி நீக்கம்...

சார சபை ஊழியர்கள் 62 பேர் சகல சலுகைகளுடனும் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இலங்கை மின்சார சபையை தனியார் மயமாக்கப் போவதாகக் கூறி அதன் தொழிற்சங்கங்கள் கடந்த ஜனவரி மாதம் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தன.

மின்சார விநியோகத்தை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தியிருந்தும் வாடிக்கையாளர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் கடமையை செய்யாமல் தவிர்க்கும் ஊழியர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு அப்போதைய மின்சக்தி எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

இதன்படி, இலங்கை மின்சார சபையின் 62 ஊழியர்கள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டனர்.

எனினும் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் எரிசக்தி அமைச்சர் பொறியியலாளர் குமார ஜயக்கொடியின் விசேட உத்தரவின் பேரில் குறித்த ஊழியர்கள் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு, இழந்த சலுகைகள் மீண்டும் பெற்றுக் கொடுக்கப்பட்டது போன்று தண்டனைகள் இடமாற்றம் ரத்து செய்யப்பட்டுள்ளன. (ம-7)


## காணி விற்பனைக்குண்டு

**யாழ்ப்பாணம் கைதடி மெயின் றோட்டுடன் 42 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- 1 ½ , 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- 20 அடிப் பாதையுடன், நிலப் பரப்பு, மேட்டு நிலம், நன்னீருற்று
- UDA அனுமதி, பிரதேச சபை அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்,
- தரகர் தேவையில்லை
- பரம்பரை ஆவணம்
- பார்வையிடும் நேரம் : காலை 8.00 முதல் மதியம் 1.00 வரை பிற்பகல் 3.00 முதல் பிற்பகல் 6.00 வரை

குரு (2829)

**076 069 1105/ 076 298 1105**

## தரம் 6

**ENGLISH & MATHS GROUP CLASSES**

By : P.MATHAN

ஆரம்பம் : 28.12.2024
சனிக்கிழமை 8.00am
18/18, Wyman Road, Nallur.
(2834)

**077 792 3653**

## வைத்தியம்

வலிப்பு நோய் | கை விறைப்பு
கழுத்து வலி | கால் பாத விறைப்பு |
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி
தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.

Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669
(670)

## காணி விற்பனைக்குண்டு

**யாழ்ப்பாணம் உரும்பிராயில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்**

- 18 அடிப் பாதையுடன், நன்னீருற்று
- உரும்பிராய்ச் சந்தியிலிருந்து 500 m தூரம்
- உரும்பிராய்ச் சந்தியிலிருந்து கோப்பாய் செல்லும் பிரதான காபர் வீதியிலிருந்து 50 m தூரம்
- பார்வையிடும் நேரம் காலை 8.00 முதல் மதியம் 1.00 வரை பிற்பகல் 3.00 முதல் பிற்பகல் 6.00 வரை.

(2829)
குரு **076 017 1105**

## TECHNO WORLD

**A/L தொழில்நுட்பப் பிரிவு**

செயன்முறை வகுப்புக்கள் மற்றும் பரீட்சைகள்

பொறியியல் தொழில்நுட்பம்
உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்

ஆரம்பம் : 05.01.2025 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.00 மணி
இடம் : வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.
(C-1883)

**077 017 5346**

## CANADA VISA

- 100% உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.
- Swiss Visa
- France Visa
- German Visa
- Norway Visa
- அனைத்து நாடுகளுக்குமான விசா சேவைகள் மிகக் குறைந்த செலவில்

(2835)

**Exponet Overseas consultant**
No-125, Arasady Road, Jaffna.
071 415 0995
021 435 5113

## NEWTON, NALLUR

**தரம் 6 [2025]**
ஆங்கில, தமிழ் மொழி மூல வகுப்புகள்

ஆரம்பம் 28.12.2024
சனிக்கிழமை 8.00 am

- தமிழ்
- கணிதம்
- விஞ்ஞானம்
- ஆங்கிலம்
- வரலாறு
- புவியியல்
- குடியுரிமை
- சுகாதாரம்
- ICT
- சிங்களம்

(2834)

18/18, வைமன் வீதி, நல்லூர்
TCT Supermarket அருகில்
**077 792 3653**

## காணி விற்பனைக்குண்டு

**யாழ்ப்பாணம் அச்சுவேலி சன்னதி வீதி வீரபத்திரர் றோட்டில் 5 ½ பரப்புக்காணி 1 ½ பரப்பாகப் பிரித்த நிலையில் விற்பனைக்குண்டு.**

- நிலப்பரப்பு
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி

(2830)

**077 288 0152**
**077 468 3354**

## UNICORN FACILITATORS (PVT) LTD.

STUDY ABROAD



1. Study in Russia / Belarus and work as a Doctor in Australia.
2. Higher education in any universities in the world.
3. Affordable cost.
4. We have solutions for IELTS and Show - Money requirements.

+94 71 9830055, +94 76 0891614, +94 77 7687821
No. 439 Temple Road Nallur,Jaffna. www.unicornmmigrate.com
info@unicornmigrate.com
(2837)

## வேலைவாய்ப்பு

யாழ். நகரில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு ஆங்கில அறிவு/ கணனி அறிவு உடைய பெண் வேலையாட்கள் தேவை.
வயது : 20 - 30
(2835)

**Exponet Overseas consultant**
No-125, Arasady Road, Jaffna.
071 415 0995/ 021 435 5113

## V2 VISA SERVICES
கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1889)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org